திராவிடநாடு

15—11—59 | வார வெளியீடு | விலை 16 காசு

விலைவாசி ஏறுதே!

—[எழிலோவியம் பரமசிவம்]—

விலைவாசி விஷம்போல ஏறுது—ஏழை
விழிக்கண்ணீர் வாழ்க்கையின் துயர்தனைக் கூறுது!
சிலையா? சுவரா? உழைப்பவர் கூட்டம்?—உணவு
செலுத்தாமல் இருந்து நாள்தனை ஓட்ட?

வயிற்றைக் கழுவிட வருந்தியே உழைக்கனும்—பெற்று
வைத்திருக்கும் பிள்ளைகுட்டி வயிற்றையும் நிரப்பனும்!
அயலாருக் குழைத்தேதான் அன்றாடம் பிழைக்கனும்—படி
அரிசிவிலை ஏறினால் உயிரைத்தான் இழக்கனும்!

நெய்ச்சோறு பால்சோறு மாடியிலே நிறையும்—வடித்த
நீராகாரம் இல்லாமல் ஏழைவயிறு இரையும்!
ஐந்தாண்டுத் திட்டமோ அடுக்கடுக்காய்ப் பிறக்குது-அந்தோ!
ஆனாலும் நாட்டினிலே ஏழைக்கூட்டம் இறக்குது!

ஆலைகளும் பணங்களும் முதலாளியின் கையில்—அதை
அதிகமாக்கும் உழைப்பெல்லாம் உழைப்பவரின் மெய்யில்!
சேலைகளும் நகைகளும் பணக்காரர் வீட்டில்—கந்தல்
சிற்றாடை கட்டியுள்ள எளியோரோ ரோட்டில்!

காந்திவிழா நேருவிழா கடல்போலப் பெருகுது—மக்கள்
கம்புசோளம் வாங்கிடவும் உழைத்தகூலி குறையுது!
மாந்தரிடம் அமைச்சர்களோ வாயினிக்கப் பேசுறார்-அதை
மடக்கிக்கேட்கும் நல்லவரை மனம்போலவே ஏசுறார்

அதனால்—,

ஆளுகின்ற தகுதியுள்ளோர் ஆளவேண்டும் நாட்டினை
—அந்த
அறிவினிலே குறைந்தவர்கள் விளைப்பாரடா கேட்டினை!
நீளுகின்ற திராவிடத்தில் நீதிகிடந்து தவிக்குது—நல்ல
நெஞ்சில்லார் ஆளுவதால் நிலைமைஇப்படி இருக்குது!



மனிதச்சந்தடி அடங்கிவிட்டது.

அவன் வழக்கமான கடைத் திண்ணையில் வந்து படுத்துக் கொண்டான். அவன் உடையும் தோற்றமும் அவனை யாரென்று சொல்லும். பிச்சைக்காரன்!

நிமிர்ந்து பார்த்தான். வழக்கமான இடங்கள்! வழக்கமான பொருள்கள்!

தெருவை அடைத்துக்கொண்டிருந்தது பிள்ளையார் கோயில்! அதன் நீண்ட திண்ணையில் பகலில் இருக்கும் பழக்கடையும் தையல் கடையும் இப்பொழுது இல்லை. யார் யாரோ தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்சத்தூரத்தில் 'மெர்க்குரி' விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. தெருவோரத்தில் அசை போட்டுக்கொண்டிருந்தன மாடுகள். கோயிலைச் சுற்றிலும் குப்பை கூளங்கள்! அதன் முன்னும் பின்னும் இரண்டு உருவங்கள் கைவிரித்துஓடின. இருளை விழுங்கி வயிற்றை நிரப்பிக்கொண்ட சோக உருவங்கள்!

அதுமட்டுமா?

ஜோடி உருவங்கள் அந்த இருளில் வழக்கமாக ஒதுங்கும். ஆமாம்; அந்த உருவங்கள் மனிதச் சதையை விலைகூறும் கசாப்புக்கடைகள்!

அந்த ஊர் கடைத்தெருவின் இரவுத்தோற்றமிது.

அவன் தலையை உயர்த்தி மீண்டும் பார்த்தான். அந்தக் கடைத் தெருவிற்குத் திரண்டுவிட்ட 'மகத்துவ'த்தைக் குறைக்க அந்த இரவு விரும்பவில்லை. இல்லையென்றால் ஏன் அந்த இரு நிழல்கள் அந்தச் சந்தின் இருளில் நெளிந்துகொண்டிருக்கவேண்டும்?

அவன் மனம் புகைந்தது. புகைச் சுழலில், சிந்தனை கொடிவிட்டு நெளிந்தது.

"கோயிலின் உள்ளே மனிதப் பண்பின் மலர்மணம்! வெளியில் பிணநாற்றம்! குப்பைகள்! இடையில் கோயில்! இலட்சியமாக இருக்கவேண்டும் என்பது அவன் நம்பிக்கை! பயன்? ஒதுங்கியே நிற்கிறது இலட்சியம்! கலக்கவில்லையே வாழ்வில்..."

மீண்டும் எண்ணக்குமுறல்!

"உள்ளே மோட்ச, நரகம் பற்றிய இனிப்புக் கசப்புப் பேச்சுக்கள்! ஒழுக்க விதி பற்றிய உபதேச மழை! எல்லோரும் எல்லாவற்றிற்கும் சம்மதம் என்றே சொல்லுகிறார்கள். நடக்கிறதா? இல்லை. ஏன்?... விதிகளை அணைத்துக் கொள்ள வெளிப்புறம் தயாராக இல்லை. மாற்ற எவரேனும் நினைத்தார்களா?... உள்ளே உபதேசம்! உபதேசம்! எப்பொழுதும் உபதேசம்!... மண்ணாய்ப்போக..."

எழுந்து கொஞ்சம் நடந்தான். கோயில் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். தூங்கிக்கொண்டிருந்தவர்கள் அவன் கவனத்தில் விழுந்து மறைகிற கடைசி நிமிடத்தின் திருப்பத்தில் ஒரு புத்தொளி! இதயம் படபடத்தது; கைகள் வெடவெடத்தன.

ஒரு இளம் பெண்! அவளும் அழுக்குக் கந்தலுடன்தான்! அவளை அவன் தெரிந்துகொண்டான். குடும்பத்து ஆளைத் தெரிந்துகொள்ள முடியாதா என்ன? ஆமாம்; அவளும் அவன் குடும்பம்தான்! பிச்சைக்காரி!

துணிகள் நெகிழ்ந்து அலங்கோலமாகக் கிடந்தன. அவன் பார்வை அந்த இடத்தில் ஒட்டிக் கொண்டது.

"அடடா!... அலங்கோலத்தில் பெண்ணுக்கு இவ்வளவு அழகா?..."

அவள் அழகி அல்ல; கறுப்பு நிறம்! முகத்தில்கூட அம்மைத் தழும்புகள்! உடல் முழுவதும் புழுதியும் தூசியும்! இருந்தும் இயற்கை சும்மா விடுகிறதா? பணக்காரி, ஏழை என்றோ, அவலட்சணமென்றோ பார்க்கிறதா? பருவத்தில் தன் கடமையைச் செய்துவிட்டுப் போய்விடுகிறதே! "அந்த" அழகு, சதைக் கொழுமை அவன் இதயத்தைக் கிறின.

அவனுக்கு இது புதிது! முப்பது வயதாகியும் தோன்றாத நினைப்பு! இன்று?... மனத்திலே ஒருவித நெகிழ்ச்சி! ஒரு இளக்கம்! ஒரு ஏக்கம்! உணர்ச்சி அவன் மறதியைக் கலைத்தது; ஆண் என்று நினைவூட்டியது.

குழம்பியபடி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

மறுநாள்! அவன் கண்களில் அதே காட்சி!

ஏதோ போனான்; வந்தான். ஆனால் மனத்தில் அதே குழப்பம்! மயக்கம்!

அன்று இரவு! மறுபடியும் கோயில் திண்ணைக்கு வந்தான். அவள் முந்திய இரவு படுத்த படியே இன்றும் படுத்திருந்தாள்.

உணர்ச்சிகள் நெருப்பாயின. மூச்சில் அனல் காற்று அடித்தது.

நெருங்கினான்.

அவள் வாரிச் சுருட்டி எழுந்தாள். அவளுக்கு ஒரே திகைப்பு!

அவன் முகத்தில் நூற்றுக் கணக்கான சுருக்கங்கள்! எரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

அவன் பயந்துவிட்டான். திடீரென ஏதோ யோசனை! அவள் கைகளில் எதையோ திணித்தான். படபடப்பில் கைதவறிக் கீழே விழுந்துவிட்டன. ஆமாம்; காலணா

(4-ம் பக்கம் பார்க்க)

வசதியற்ற வளர்ச்சி!!

18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (15-11-59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 18

"நேற்றைக்கு இருந்தாரை இன்றைக்குக் காணவில்லை" என்று விரக்தி தோன்றும்போது 'வேதாந்தம்' பேசுவோரைக் காணுகின்றோம். மனிதனைப் பொறுத்தவரை இது உண்மையோ இல்லையோ—விலைகளைப் பொறுத்தவரை மிகமிக ஆழமான உண்மையாக இருக்கிறது. ஒரு பொருள் நேற்று விற்ற விலைக்கு இன்று கிடைக்கக்காணோம். இன்று உள்ள விலை நாளை நிலைக்கும் என்றும் நம்ப இயலவில்லை. என்றும் ஏறிக்கொண்டே இருக்கும் இயல்பு விலைகளுக்கு இயற்கையாக அமைந்துவிட்டதோ என்று எண்ணும் அளவில் விலைகள் நாள் ஒரு ரூபாயும் பொழுது ஒரு காசுமாக வளர்ந்துகொண்டேயிருக்கின்றன.

இதற்கு என்ன காரணம்? ஆளுக்கு ஆள் ஒவ்வொருவகையான காரணம் சொல்லுவதைக் கேட்கின்றோம். பொருள் பற்றுக்குறை, எனவே, உள்ள பொருளுக்குத் தேவைமிகுவதினால் விலையும் மிகுகின்றது என்கின்றனர். 'இல்லை இல்லை' பொருள் என்னவோ வேண்டிய அளவு இருக்கிறது. ஆனால் உள்ள பொருள் வெளியில் வராமல் அடைக்கப்பட்டிருக்கிறது, பதுக்கல்தான் இந்த விலையேற்றத்திற்குக் காரணம் என்று வேறு சிலர் சொல்லுகின்றனர்.

காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். விலை ஏற்றம் இருக்கிறது—அதனால் இன்னலும் தொல்லையும் உறுவது பொதுமக்கள். எவ்வளவு விலையானாலும் வாங்கித் தீருவது என்று உறுதியுடன்சென்றால், பொருளாவது கிடைக்கின்றதா எனின், நடந்துபோன இடத்தைக் கீழே படிந்துள்ள சுவடு கண்டு தெளிவதுபோல, "அரிசி இல்லை" 'சர்க்கரை இல்லை' 'புளி இல்லை' என்று உள்ள அறிவிப்புக்களைப் பார்த்து, "ஓ! இங்கே அரிசி, புளி, சர்க்கரை எல்லாம் ஒரு காலத்தில் விற்றதுபோலும்!" என்று எண்ணிக்கொண்டு திரும்ப வேண்டியதாகிறது.

இந்த நிலை இப்படியே நீடிக்க வேண்டியதுதானா? உழைத்து, பொருள்தேடி, வாழவேண்டிய மக்கள் கையும் பையுமாகக் கடைத்தெருவெல்லாம் சுற்றி அலைந்து மீண்டால், அவன் குடும்பம் என்ன ஆவது? தொழில் என்ன ஆவது?

"பொருள் இல்லை, அதனால் பற்றுக்குறை ஏற்பட்டு விலை ஏறுகின்றது" என்பது விலைகளின் ஏற்றத்திற்குக் காரணமாக இருக்குமானால், தேவையான அளவு பொருள்களைக் கொண்டுவந்து தரவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அல்லது பொருள் போதுமான அளவு இருந்து பதுக்கலின் காரணமாக நாட்டில் நெருக்கடி நிலை ஏற்படுமாயின், பதுக்கப்பட்டுள்ள பொருள்களை வெளிக்கொணர்ந்து பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வதும் அரசாங்கம் மக்களின் நலனுக்காகச் செய்யவேண்டிய கடமையாகும்.

'ஓரளவுக்கு நாங்கள் எங்களால் ஆன முயற்சிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறோம்' என்று அமைச்சர்கள் அடிக்கடி கூறிடக் கேட்கின்றோம். என்றாலும் அவர்கள் சொல்லுவதைச் செயலாக்குகின்றார்களா என்பதை நம்ப இயலவில்லை. ஏனெனில் நாளுக்கு நாள் நிலைமை சீர்கேடாகி வருகிறதே ஒழியச் சீர்திருந்தக் காணோம்.

நாட்டில் போர் முதலிய நெருக்கடி நேரங்களில் பொருள்களின் விலை ஏறுவதோ, பொருள்களின் தட்டுப்பாடோ ஏற்படுமானால் அதற்கு ஓரளவு நியாயமிருக்கிறது என்றுகூடக் கூறலாம். ஆனால் உலகமெல்லாம் குண்டு வீச்சுகளும், போர் ஓலமும் கேட்ட போது இருந்ததைவிட மிகுதியான அளவுக்கு இன்று அல்லலும் அவதியும் இருந்திடக் காணுகின்றோம்.

இந்த நிலை எந்த அரசுக்கும் பெருமை தருவது அன்று; புகழ் தருவதும் அன்று.

ஆனால், துணைக்கண்டத்துப் பிரதமரோ இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றார்; பெருமை கொள்ளுகின்றார்; மார்தட்டுகின்றார். சர்க்கரைக்கு இப்போது ஏற்பட்டுள்ள இந்தப் பற்றுக்குறை நாட்டின் வளர்ச்சியைக் காட்டுகின்றது. சர்க்கரை பயன்படுத்துகின்ற அளவு எல்லோருடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்துவிட்டது' என்று கூறி மகிழ்கின்றார். அவருடைய வாதத்தை உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், மக்களுடைய தேவையை நிறைசெய்கின்ற அளவுக்கு அரசாங்கம் திறமைபெறவில்லை என்று ஆகின்றது. ஒரு நாட்டின் நல்ல நிலை என்பது—மக்களுடைய வாழ்க்கை உயருவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. உயருகின்ற நிலைக்கு ஏற்ற அர

சாங்கம் அமையவேண்டும். இல்லையேல் 'உயர்ந்த' வாழ்க்கை ஒரு நாளைக்குத் தாழ்ந்துவிடும். வண்டியில் ஏற்றப்படும் பாரத்தைத் தாங்கும் வலிவுள்ள அச்சு இருக்கவேண்டும். அப்போதுதான் அதனை நல்ல வண்டி என்று கூறமுடியும். இல்லையேல் வண்டி எவ்வளவு புதியதோற்றத்துடனும், அமைப்புடனும் இருப்பினும் அதனால் பயன் இல்லை.

இன்றைய தினம் மக்களுடைய வாழ்க்கை உயர்ந்துவிட்டது என்பது உண்மையாயின், உயர்ந்திருக்கின்ற வாழ்க்கைக்கு ஏற்ற வசதி செய்கின்ற ஆற்றலோ திறமையோ அரசாங்கத்திற்கு இல்லை என்பது பெறப்படுகின்றது.

பண்டிதநேரு அவர்கள், உணவுப் பற்றுக்குறை, நாட்டின் வளர்ச்சியையும், வாழ்க்கைத் தரத்தின் உயர்வையும் காட்டுகின்றதென்று கூறுவதற்கேற்ப, வசதிகளை நாம் உண்டாக்கியிருக்கிறோமா என்பதை மறந்து இவ்விதம் கூறியிருக்கின்றார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சர்க்கரையைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு மக்களின் 'தரம்' உயர்ந்துவிட்டதென்றால், மக்களுக்குத் தேவையான அளவு சர்க்கரையும் பிற உணவுப் பொருள்களும் கிடைக்கும் வாய்ப்பையும் வசதியையும் அரசாங்கம்தானே உண்டாக்கித் தரவேண்டும்! இல்லையென்றால் — முடியவில்லையென்றால், நாட்டின் முதல்வர் கூறும் வளர்ச்சியை வசதியற்ற—வாய்ப்பற்ற வளர்ச்சியென்றே எவரும் கூறுவர். இயலாமையை மூடிமறைக்க எடுத்துக்காட்டும் மேற்கோளாகவே இதனை மக்கள்கொள்வர்.

காமராசர் இவை ஒன்றைப் பற்றியும் அறிந்தவராகக் காட்டிக்கொள்ளக்கூட விரும்பவில்லை. 'விலைகள் உயர்ந்துவிட்டனவே' என்றால் "ஓ! அப்படியா?" என்று புதிய செய்தி ஒன்றைக் கேட்பதுபோல், வியப்புக்காட்டி, 'ஏதாவது செய்யுங்கள்' என்றால் "ஆகட்டும் பார்க்கலாம்" என்ற கைஇருப்புப் பல்லவியைப் பாடுகின்றார்.

மக்கள் இந்த நிலையில் கிடந்து, இன்னலுற வேண்டியதுதானா? இதற்கு விடிவே கிடையாதா? இருக்கிறது என்றால் என்ன வழி?

குடியாட்சி முறையில் எதையும் எடுத்துச் சொல்லித்தான் பெறவேண்டும். எந்த ஆட்சியிலும் கேட்டுத்தான் பெறவேண்டும் என்றாலும், குடியாட்சி முறையில்தான் கேட்பதற்கு உள்ள உரிமைகளும், கேட்பதனால் மட்டுமே பலன்களும் பெற இயலும். ஆகையால் இந்த நிலையைப்பற்றியும் ஆளவந்திருப்போரிடம் எடுத்துச் சொல்லவேண்டும்.

யார் இந்தப் பணியைச் செய்வது? நாட்டை ஆளும் கட்சியினர் செய்வார்கள் என்று எண்ண இடம் இல்லை. ஆகையால் எதிர்க்கட்சிகளிடம்தான் இந்தப் பெரும் பொறுப்பு இருக்கிறது. அதிலும் தமிழ் நாட்டை, தென்னகத்தை, திராவிடத்தைப் பொறுத்தமட்டில் நமது பொறுப்பும் கடமையும் மற்ற எந்தக் கட்சியையும்விட மிகுந்திருக்கின்றது. தென்னகத்து அரசியல் வானில் குழப்பம் நேரும்போதும், ஆபத்து நீங்கி அமைதி நிலவவும், மக்கள் நம்மையே நம்புகின்றனர். நாம் என்ன சொல்லுகின்றோம், ஏது செய்யப்போகிறோம் என்பதையே எதிர்பார்க்கின்றனர்.

அந்த நம்பிக்கைக்கு உரிய வகையில் நமது கடமையை ஆற்ற நாட்டில் உள்ள பிறகட்சிகளோடு இணைந்து செயலாற்றவேண்டிய முறையை நமது துணைப் பொதுச் செயலாளரின் அறிக்கை தெளிவுபடுத்துகின்றது. அந்த அறிக்கையை இதழின் பிறிதோரிடத்தில் காணலாம்.

அதன்படி ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள், நாட்டு மக்களுக்கு நிலையை விளக்கி, அரசாங்கம் செயல்படும் வகையில் அவர்களது முயற்சியும் தூண்டுதலும் அமையவேண்டும் என்பதனை எடுத்துக்காட்டி இதைப்போன்ற நிலை இனியும் வராமலிருக்க வழிசெய்ய வேண்டுகின்றோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

அரையணா சில்லறைகள்! அந்தச் சில்லறையின் உயிர்ச் சத்தத்தைக் கேட்டதும் அவளிடம் எவ்வளவு மாற்றங்கள்! கண்களின் ஓரத்தில் எத்தனை கனிவு!

அவள் கண்களை அவன் உற்றுப் பார்த்தான். ஆழத்தை ஊடுருவிப் பார்த்தான். விசித்திரமான சிந்தனைகள் திடீரெனக் குதித்தன. பார்வையில் வெறிபிடித்தது.

ஓரக்கண்களில் பொருள் நிறைந்த புன்னகையைக் காட்டிவிட்டு அவள் அந்த இருண்ட சந்திற்கு நகர்ந்தாள்.

அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

"இரு ஒலி! ஒன்றின் ஆதாரம் இதயம்! மற்றொன்றிக்கோ உலோகம்! ஆனால்... இதயத்தின் ஒலி அவனை அனலாக்கிற்று. உயிரற்ற உலோகத்தின் ஒலியோ அவனைப் பனியாக்கிற்று. உயிர் ஒலிக்கு அடங்காத உணர்வு; அதன் போதையில் மயங்காத உடல்... சே! வெறும் உலோகத்தின் அடிமை!... அவளுக்கு நான் அடிமையா?... தூ!..."

ஆளைக் காணவில்லையே என்று அவள் தலையை நீட்டிப் பார்த்தாள். அங்கே அவனைக் காணவில்லை.

தூரத்தில்... தெருவின் திருப்பத்தில் சாயைபோல் ஒரு உருவம் குனிந்தபடி மறைவது அவள் கண்களுக்கு மங்கலாகத் தெரிந்துகொண்டிருந்தது.

கதையின் செயல்!

"செவ்வந்தி" இதழ் ஆசிரியரிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தை அரங்கநாதனால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது இவ்வளவுதான்! "ஒரே கருத்தை வைத்துக்கொண்டு இரு கதைகளை எழுதி வெவ்வேறு புனைபெயரில் இருவேறு இதழ்களுக்கு அனுப்பி வெளியிடச் செய்வது ஒரு நல்ல எழுத்தாளருக்கு — அதிலும் உங்களைப்போன்ற இளம் எழுத்தாளருக்கு அழகல்ல. அன்பு கூர்ந்து இனி அப்படிச் செய்யாதீர்கள்"

அரங்கநாதன் ஓர் அரசாங்க ஊழியன். கிடைக்கும் ஓய்வு நேரத்தில் சிறுகதைகள் எழுதி "மணிமுடி" என்னும் புனைபெயரில் "செவ்வந்தி" இதழுக்கு அனுப்பி வருபவன். சென்ற திங்கள்கூட "கன்றும் அழுதது" என்னும் அவனுடைய உருவகக்கதை 'செவ்வந்தி' இதழில் வெளியாகியிருந்தது. அந்தக் கதை வெளிவந்த பத்து நாட்களுக்குப் பின்னர்தான் மேலே சொன்ன கடிதம் வந்தது. அதே கருத்துள்ள வேறு ஒரு கதையை அவன் எழுதவும் இல்லை. வேறு எந்த இதழுக்கும் அவன் கதை அனுப்புவதும் இல்லை.

"நாம் எழுதிய அதே கருத்துள்ள கதையை வேறுயார் எழுதியிருக்கிறார்களோ? எந்த இதழில் வெளியாகி இருக்கிறதோ? தெரியவில்லையே! கடிதம் எழுதிய இதழாசிரியர் விவரமாக எழுதக்கூடாதா? ஒன்றுமே தெரிந்துகொள்ள முடியாதபடி எழுதியிருக்கிறாரே!" என்று அரங்கநாதன் எண்ணிக்கொண்டிருந்தபொழுது, நண்பன் ஒருவன் அவனைத் தேடிக்கொண்டு வந்தான்.

வந்த நண்பனை வரவேற்றுப் பேசிக்கொண்டிருக்கையில் நண்பனிடமிருந்த "மல்லிகை" என்னும் இதழை வாங்கிப் பார்த்தான். அதில் "கன்றும் குழந்தையும்" என்னும் தலைப்பில் ஓர் உருவகக் கதை இருக்கக்கண்டு, அதை ஆவலோடு படித்தான்:

கன்றும் குழந்தையும்

—[பொன்முடி]—

'நான் இனிமேல் உன்னோடு பேசப்போவதில்லை" என்றது. கன்று குழந்தையைப் பார்த்து.

"ஏன்?' என்று கேட்டது குழந்தை.

"நான் குடிப்பதற்கென்று என் அம்மாவிடம் இருக்கும் பாலையெல்லாம்தான் உங்கள் அப்பா கறந்துகொண்டு போய் விடுகிறாரே" என்றது கன்று.

"அப்படியா? அது எனக்குத் தெரியாதே" என்றது குழந்தை.

"இத்தனை நாளாக நீ குடித்து வரும் பால் யாருடையது என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்?"

"பாலா? அது எப்படியிருக்குமென்றே எனக்குத்தெரியாதே!" நான் நாள்தோறும் கூழ்தானே குடித்து வருகிறேன்"

தமிழ்வேள்

"உனக்கு அந்தப் பாலில் கொஞ்சம் கூடக் கொடுக்காமல் உன்னுடைய அப்பாவும் அம்மாவுமே குடித்துவிடுகிறார்கள் போலிருக்கிறது!"

"இல்லையே! அவர்களும் கூழ் குடிப்பதைத்தானே காண்கிறேன் நான்"

"இரு! எங்கள் அம்மாவிடம் போய்க் கேட்டுவருகிறேன்" என்று கன்று தன் தாயிடம் எழுந்து ஓடியது.

"அம்மா! நாள்தோறும் உன்னிடமிருந்து அந்தக் குழந்தையின் அப்பா பாலைக் கறந்து கொண்டு போகிறாரே, அதில் கொஞ்சம்கூடக் குழந்தைக்குக் கொடுப்பதில்லையாமே! எல்லாவற்றையும் பெரியவர்களே குடித்துவிடுவார்களாம்மா!" என்று பசுவிடம் கன்று வினவியது

"இல்லை கண்ணே! அந்தப் பாலை விற்றுத்தான் கூழாவது குடித்து வாழ்கிறார்கள் இவர்கள்" என்று சொல்லிற்றுபசு.

மீண்டும் கன்று குழந்தையிடம் ஓடியது.

"உங்கள் அம்மா என்ன சொன்னார்கள்?" என்றது குழந்தை.

"நீ சொன்னது மெய்தான்' என்றார்கள்.

"அப்படியானால் நீ என்னோடு முன்போலவே பேசி விளையாடி வருவாய் அல்லவா?" என்று குழந்தை கன்றை முத்தமிட்டது.

"நாம் இருவரும்தான் ஒன்றுயிற்றே!" என்று கன்றும் குழந்தையை முத்தமிட்டது.

படித்து முடித்த உடனே "செவ்வந்தி" ஆசிரியரின் கடிதம் அவனுக்குப் புரிந்துவிட்டது. சென்னையிலிருந்துவெளிவரும்"செவ்வந்தி" இதழிலும் மதுரையிலிருந்துவெளி வரும் **"மல்லிகை" இதழிலும் ஒரே**

மாதத்தில் ஒரே கருத்துள்ள கதை வெளிவரின், அதை எழுதியவர் ஒருவராகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணுவது இயல்பு தானே! ஆசிரியர்மேல் குற்றம் சொல்வதற்கு இல்லை. "கன்றும் குழந்தையும்" என்னும் கதை அவனுடைய "கன்றும் அழுதது" என்னும் கதையோடு அவ்வளவு ஒட்டியிருந்தது.

நண்பன் விடைபெற்றுச் சென்றதும் "செவ்வந்தி" இதழை எடுத்து அரங்கநாதன் தன்னுடைய கதையை ஒருமுறை படித்துப் பார்த்தான்.

கன்றும் அழுதது!

—[மணிமுடி]—

தாய்ப் பசு படுத்தபடி அசை போட்டுக்கொண்டிருந்தது, தோட்டத்து மரநிழலில். கன்று வீட்டிற்குள்ளிருந்து தோட்டத்திற்கு ஓடிவந்தது. வந்த கன்று தாயின்மீது ஏறி இறங்கித் துள்ளிக் குதிக்கலாயிற்று!

"என்ன கண்ணே! என்றுமில்லாமல் இப்படித் துள்ளிக் குதிக்கிறாயே!" என்றது பசு.

"இன்றுதான் அம்மா, என்னுடைய மனம் மகிழ்ந்தது" என்றது கன்று.

"என்ன அப்படி இன்று கண்டுவிட்டாய்?"

"இரண்டு நாட்களுக்கு முன்னர்தானம்மா தெரிந்தது, எனக்கென்று உன்னிடம் சுரக்கும் பாலையெல்லாம் இந்தக் குடியானவன் தன் வீட்டுக் குழந்தைக்காகத்தான் கறந்து கொண்டுபோகிறானாம்! இதை எனக்குப் பக்கத்துவீட்டுக்கன்று சொல்லிற்று. அதிலிருந்து இந்த வீட்டுக் குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஆத்திரம் வருவது உண்டு. இன்று அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டு விட்டேன்!"

"ஐயோ! என்னசெய்துவிட்டாய்?"

"அந்தக் குழந்தை வழக்கம் போல் கொஞ்சம் வைக்கோலைக் கையில் எடுத்துவந்து எனக்குத் தர நீட்டிற்று. சுற்றிலும் பார்த்தேன். யாருமில்லை. உடனே ஒரே பாய்ச்சலில் அந்தக் குழந்தையை முட்டித் தள்ளிவிட்டு ஓடிவந்துவிட்டேன்." என்றது கன்று.

பசு தன் இரு காதுகளையும் உயர்த்தி உள்ளே வீறிட்டழும் குழந்தையின் குரலைக் கேட்டது. "கண்ணே! என்ன கெடுமதி உனக்கு. என்னிடம் கேட்டு அறியக்கூடாதா? யாரோ சொன்னதைக் கேட்டுக் குழந்தையிடம் பகைமைகொண்டு அதற்குத் தீங்கு இழைத்துவிட்டாயே! என்னிடமிருந்து கறந்து செல்லும் பாலை அந்தக் குழந்தையா குடிக்கிறது பாவம்! அந்தப்பாலை விற்றுத்தான் கண்ணே குடியானவன் வீட்டுக் குடும்பம் நாளைக்கு ஒரு வேளை கஞ்சியாவது குடிக்கிறது!" என்று சொல்லிற்று பசு. அதைக் கேட்ட கன்று தன் செயலை நினைந்து மனம் நொந்து பக்கத்திலிருந்த கல்லில் தலையை முட்டிக் கொண்டது.

அங்கே வீட்டுக்குள் கன்று முட்டியதால் குழந்தை அழ, இங்கே கல்லில் தலையை முட்டிக் கொண்டு கன்றும் அழுதது.

*

"நம்முடைய கதையில் கன்று குழந்தையை முட்டுகிறது. பொன்முடியின் கதையிலோ கன்று குழந்தையை முத்தமிடுகிறது. இரண்டையும் ஒப்பிட்டுப்பார்க்கையில் பொன்முடியின் கதையே நம் கதையைவிடச் சிறந்து காணப்படுகிறது. அந்தப் பொன்முடி என்னும் புனைபெயரில் புகுந்துகொண்டிருப்பவர் யாரோ? கதைஅமைப்பிலிருந்து பொன்முடி ஒரு பெண்ணாகத்தான் இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. இவ்வளவு கருத்தொருமித்த பெண் நமக்கு வாழ்க்கைத் துணைவியாக வந்து அமையும் பேறு பெற்றால்......" என்று எண்ணமிடலானான் அரங்கநாதன். அப்படி ஒரு எண்ணம் தோன்றாமல் இருப்பதே நல்லது. தோன்றிவிட்டால் அவ்வளவுதான்! அது வளர்ந்து வாழுமே தவிர, தேய்ந்து மறையாதே!

அரங்கநாதனுடைய எண்ணமும் அப்படித்தான் வளர்ந்தது. பொன்முடி எப்படியிருப்பாள் என்று கற்பனையிலே காண ஆரம்பித்தான். தன்னுடைய அலுவலகத்திலே பணியாற்றும் குமுதவல்லியைப்போல் இருப்பாளோ? என்று நினைத்தான். அவளை எங்கே காண்பது? எப்படித் தொடர்பு கொள்வது? என்றெல்லாம் சிந்தித்தான். பொன்முடியின் முகவரியைத் தெரிவிக்கும்படி "மல்லிகை" ஆசிரியருக்கும் ஒரு கடிதம் எழுதினான். பத்து நாட்களுக்குப் பின்னர், 'மல்லிகை' ஆசிரியரிடமிருந்து பதில் வந்தது. ஆனால் அதில் 'பொன்முடியின் முகவரியைத் தாங்கள் கேட்டிருப்பதாக அவருக்கு எழுதி அவருடைய இசைவைக் கேட்டோம்! இசைவு தர அவர் மறுத்துவிட்டார். எனவே அம் முகவரியை தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்,' என எழுதிவிட்டார் ஆசிரியர்.

* * *

"பொன்முடி மதுரையைச் சேர்ந்தவளாகவே இருக்குமா? குமுதவல்லியும் மதுரையிலிருந்து வந்திருப்பவள்தானே! ஒருகால் அவளுக்குப் பொன்முடியைப்பற்றித் தெரிந்தாலும் தெரியலாம்! கேட்டுப் பார்க்கலாமா?...என்ன பைத்தியக்காரத்தனம்! எப்படிப்போய் அவளிடம் இதைக் கேட்பது? கேட்டால் என்ன நினைப்பாளோ? பொன்முடி மதுரையைச் சேர்ந்தவள்தான் என்பது என்ன நிச்சயம்? நாம் திருச்சியிலிருந்து கொண்டு, சென்னையிலிருந்து வெளியாகும் "செவ்வந்தி" இதழுக்கு எழுதுவதுபோல், பொன்முடி எந்த ஊரிலிருந்துகொண்டு எழுதுகிறாளோ? மதுரையைச் சேர்ந்தவளாகவே இருப்பினும், குமுதவல்லிக்கு எப்படித் தெரியும்? மதுரை என்ன சிறு கிராமமா? பெரு நகரமாயிற்றே! நகரத்தில் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்பவர்களே ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து கொள்வதில்லையே! குமுதவல்லிக்கு எப்படிப் பொன்முடி தெரிந்திருக்கமுடியும்? ..."— இப்படி நாளுக்கு நாள் பொன்முடியைப்பற்றி எண்ணுவதை அவனால் வளர்க்க முடிந்ததே தவிர, தவிர்க்க முடியவில்லை! என்ன செய்வான் பாவம்! இளைஞன் அல்லவா?

ஒருநாள் அரங்கநாதன் சாலை வழியே சென்றுகொண்டிருந்தபொழுது குமுதவல்லி எதிரே வரக் கண்டு, எப்படியாவது பொன்முடியைப்பற்றிக் கேட்டுவிடத் துடித்தான். அவள் அலுவலகத்தில் பணியாற்ற வந்து இரண்டு மாதங்களாகியும் இன்னும் ஒரு நாளா

வது அவளோடுதான் பேசியது இல்லையே என்று தயங்கினுன்.

அதற்குள் குமுதவல்லியே அரங்கநாதனைப் பார்த்து "வணக்கம்" எனக் கை குவித்தாள். அவனுல் அப்போதும் பதிலுக்கு வணக்கம் செலுத்த முடிந்ததே தவிர, வேறென்றும் பேச முடியவில்லை! அவளாகவேதான் பேசினுள்.

"மணிமுடி என்னும் புனைபெயரில் சிறுகதைகள் எழுதுவது நீங்கள்தானே?" என்றுள். அரங்கநாதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கதை எழுதுவது அவனுடைய நண்பர்களுக்குக் கூடத் தெரியாது. இந்தப் பெண்மணிக்கு அது எப்படித் தெரிந்ததோ!

"ஆமாம்! எப்பொழுதாவது எழுதுவதுண்டு" என்றுன்.

"இந்த மாதம் "மல்லிகை" இதழில் பொன்முடி என்பவள் ஒரு கதை எழுதியிருக்கிறுளே! அதைப் பார்த்திர்களா? உங்களுடைய "கன்றும் அழுதது" என்னும் கதை போலவே இருக்கிறதே! அவளை உங்களுக்குத் தெரியுமா?" என்றுள்.

எதைப்பற்றித்தான் அவளிடம் கேட்கவேண்டுமென்று நினைத்தானே அதை அவளாகவே அல்லவா கேட்கிறுள்!

"தெரியாது! அவளை உங்களுக்குத் தெரியுமா?" என்றுன்.

"அவள் என்னுடைய தோழிதான்! உங்கள் கதைகளைத் தொடர்ந்து படித்து மகிழ்பவள்! உங்கள் கதைகளைப் படித்துப் படித்தே அதைப்போல் தானும் எழுத ஆசைகொண்டு இப்பொழுதுதான் "கன்றும் குழந்தையும்" என்னும் அந்தக் கதையை எழுதினுள். அதேநேரத்தில் நீங்களும் அப்படியொரு கதை எழுதியிருப்பதைப் பார்க்க வியப்பாகவே இருக்கிறது! அவளுக்கும் உங்களைக் கண்டு அளவளாவ மிகுந்த ஆவல்! வருகிற ஞாயிற்றுக்கிழமை என்னுடைய பிறந்த நாள். அன்று அவள் கட்டாயம் வருவாள். தாங்களும் அன்புகூர்ந்து அன்று எங்கள் வீட்டு விருந்துக்கு வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"அதற்கென்ன! அவசியம் வருகிறேன்" என்றுன், அரங்கநாதன்.

உடனே ஒருவரிடமிருந்து ஒருவர் விடை பெற்றுக்கொண்டு பிரிந்து சென்றனர்.

* * *

அந்த ஞாயிற்றுக்கிழமை வருவதற்கு நான்கு நாட்களே இருந்தாலும், அரங்கநாதனுக்கு அந்த நான்கு நாட்களும் நான்கு ஆண்டுகளைப்போல் தெரிந்தது. எப்படியோ அந்த நாட்களும் மெதுவாகக் கழிந்து ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. ஆனுல் இப்பொழுது அவனுடைய மனத்தில் பொன்முடி மட்டுல் இல்லை. குமுதவல்லியும் இருந்தாள்!

"குமுதவல்லி அழகும் அடக்கமும் உள்ளவள் மட்டுமல்ல! அன்புன் பண்பும் மிகுந்தவள்! எத்துணை அன்போடு நம்மை அவள் தன் பிறந்த நாள் விருந்துக்கு அழைத்தாள், நம் கதைகளைப் படித்து மகிழ்பவர்களிலே இவளும் ஒருவளாக இருக்கவேண்டும். நாம்தான் மணிமுடி என்பதை அவள் எப்படித்தெரிந்துகொண்டாளோ?' என நினைத்தவண்ணமே சென்றவனை, வாயிற்படியில் நின்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த குமுதவல்லி "வாருங்கள்!" என்று உள்ளே அழைத்துச்சென்றுள்.

இத்தனை நாள் அலுவலகத்துக்குவந்த குமுதவல்லியா அவள்? பிறந்த நாளுக்கெனத் தன்னை அவ்வளவு அழகுபடுத்திக்கொண்டிருக்கிறுளா? அல்லது அரங்கநாதன் இன்றுதான் அவளைச் சரியாகப் பார்க்கிறுனு? பார்த்த உடனே தன் மனதை அல்லவா அவளிடத்திலே பறிகொடுத்துவிட்டான்! பொன்முடியைக்கூட அந்த நேரத்தில் மறந்துவிட்டானே!

உள்ளே அழைத்துச் சென்ற குமுதவல்லி அரங்கநாதனைத் தன் பெற்றேர்க்கு அறிமுகப்படுத்தினுள். அவர்களும் அவனை அன்போடு வரவேற்று உபசரித்தனர். தன் தந்தையருடன் அரங்கநாதன் இருந்து உரையாட, குமுதவல்லி உள்ளே சென்று ஏதோ வேலைகளைக் கவனித்தாள்.

குமுதவல்லியின் தந்தை ஓர் ஆசிரியர். அவளுடைய தாயும் ஆசிரியையாக இருந்தவள். இருவரும் ஒரே பள்ளியில் இருந்து பணியாற்றுகிறபோது ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்துகொண்டனராம். "வாழ்க்கை என்றுல் துன்பம் நிறைந்தது என்று பொதுவாகச் சொல்கிறுர்கள். ஆனுல் அது எங்களுக்கு அப்படித் தோன்றவில்லை" என்று குமுதவல்லியின் தந்தை சொன்னபோது, அவர்களுடைய அந்தச் சிறந்த வாழ்க்கையை மனமாரப் போற்றினுன் அரங்கநாதன். அப்படிப்பட்டவர்களுடைய ஒரே மகளான குமுதவல்லியைத் துணைவியாகப் பெறும்......என்று மேலே சென்ற அவன் நினைவு தடைப்பட, குமுதவல்லி அங்கேவந்து உணவருந்த அவர்களை எழுந்துவரும்படி அழைத்தாள். அவர்களும் எழுந்து சென்று உணவருந்தலாயினர். "இன்று சமையல் எல்லாம் குமுதவல்லியே செய்தாள்; எப்படியிருக்கிறதோ?" என்றுள் அவளுடைய தாய். "யார் நன்றுகச் சமைப்பது என்பதிலே உங்கள் இருவருக்குந்தான் போட்டியாயிற்றே!" என்று சிரித்தார் அவளுடைய தந்தை. "இந்தக் காலத்துப் பெண்களுக்குச் சமைக்கவே தெரியாது என்பார்கள். குமுதவல்லி அதற்கு விதிவிலக்குத்தான்!" என்று நகைத்துக்கொண்டே அரங்கநாதன் விருந்தைச் சுவைத்தான்.

விருந்துக்குப்பின் எல்லோரும் ஒன்றுக அமர்ந்து பேசுகிறபொழுது, குமுதவல்லியின் தந்தை சொன்னுர்: "இவளுக்கு உங்களுடைய கதை என்றுல் மிகவும் பிடிக்கும். அவைகளைப் படித்துப் படித்தே இப்பொழுது இவளும் கதை எழுதத் தொடங்கியிருக்கிறுள்! உங்களுக்குத் தெரிரிமா?" என்றுர். "தெரியவே தெரியாதே!" என்றுன் அரங்கநாதன். "பொன்முடி" என்னும் புனைபெயரில் எழுதினுல் எப்படித் தெரியும்?" என்றுர் அவளுடைய அன்னை.

அப்பொழுதான் அரங்கநாதனுக்குப் "பொன்முடி" யார்? என்று தெரியவந்தது. அவன் அவளை வியப்போடு நோக்கினுன், "உங்களை ஏமாற்றிவிட்டதற்கு மன்னிக்கவேண்டும்" என்பதுபோல் குமுதவல்லி நாணித் தலைகுனிந்து குறுநகை செய்தாள். அரங்கநாதன் தன் இதயத்தில் புகுந்த 'பொன்முடியும்' குமுதவல்லியும் ஒருவரானதை எண்ணிப் பூரித்துப்போனுன்!

★

முதல் நாள்

தில்லை-அரசன்

அன்று அந்தத் திங்களின் முதல் நாள். பழுவூர்த் தொழிற்கூடத்தின் வெளியில் தொழிலாளர்கள் குழுமியிருந்தனர். அன்று அவர்களுக்குத் தங்கள் உழைப்பின் ஊதியம் கிடைத்திருந்தது. அந்தத் தொழிலாளிகள் பலதரப்பட்டவர்கள். பல வயதினர். ஆனால் அனைவரின் முகத்திலும் ஓரளவு மகிழ்ச்சி நிலவியிருந்தது. உண்மையான உழைப்பின் ஊதியத்தைப் பெற்ற மகிழ்ச்சி அது.

தொழிற்சாலைச் சங்கு பெருங்குரல் எடுத்து ஊதிற்று. முதல் முறைத் தொழிலாளிகள் வெளியேறவும், அடுத்த முறைக்கான வேலையாட்களை அழைக்கவுமான எச்சரிக்கைச் சங்கு அது. பல தொழிலாளிகள் பரபரப்புடன் வெளியேறவும் உள்ளே புகவும் இருந்த அந்தக் காட்சி ஒரு மிகப் பெரிய தேன்கூட்டை நினைவுறுத்தியது. ஆம்! அது ஒரு மனிதத் தேன்கூடு.

தொழிற்கூடத்தை அடுத்துக் கழிவுநீர் தங்குவதற்காகப் பெரியதொரு சாக்கடை இருந்தது. அதன்மேலுள்ள பாலத்தின் சுவரில் சிலர் உட்கார்ந்திருந்தனர். அண்மையில் நெருங்கிப்பார்த்தால் அவர்கள் பழுவூரார் அல்ல என்பதை அறிந்துகொள்ளலாம்.

நல்ல சதைப் பிடிப்பான உடல்; அளவில் பெருத்த வயிறு, தலையில் பிரிமனையைப்போல் முறுக்கிய மஞ்சள் துணிக்கட்டு. ஒளிகுன்றிய கண்கள்; ஆலையினின்றும் வெளியேறிய உழைப்பாளர்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஆளுக்கும் பக்கத்தில் ஒவ்வொரு கணக்கர். கணக்கர்களின் நடத்தையில் தேவைக்கு மிகுதியான குழைவு காணப்பட்டது.

பழுவூர் ஆலையிலிருந்து ஊருக்குள் புகவேண்டுமானால் அவர்கள் அமர்ந்திருந்த பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். வழிகடக்கும் தொழிலாளிகளைப் பருந்துக்கண்களால் பார்த்துத் தடுத்து அவர்களிடமிருந்து தொகையை வாங்கி, யாருக்கும் புரியாத எழுத்தில் கிறுக்கிவைத்துக்கொண்டார்கள் அந்தக் கணக்கர்கள்.

இவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டே வேலைக்கு வந்தான் இளையாதித்தன். உதிரத்தைக் காயவைக்கும் உடலுழைப்பை அடகுவைத்துத் தொழிலாளிகள் பெறும் வருமானத்தின் பெரும் பகுதியை, உண்பதையும் உடுப்பதையும் தவிர வேறெதையும் அறியாத சதைக்குன்றுகள் பறித்துக்கொள்ளுவதைக் கண்டு அவன் உள்ளம் பதறியது. ஆலையை நோக்கி நடந்தான். அதன் பெரிய வாசலில் கத்தியுடன் காவல்தந்த கூர்க்காவைக் கண்டு மறவனான அவன் மனம் சோம்பியது.

நுழைவுச் சீட்டளிக்கும் சாளரத்தின் முன் நின்று தனது எண்ணின் அடையாளச் சீட்டைப் பெற்றுத் தன் வருகையைப் பதிவுசெய்யும் பொறிக்குள் போட்டு எடுத்தான். அது நேரத்தைப் பதிவுசெய்து தந்தது. மணி ஆறு-ஐந்து. ஆலையின் சங்கு மறுபடியும் அலறிற்று. உள்ளே வரும் தொழிலாளிகளிடையே பரபரப்பு மிகுந்தது. உடைமாற்ற எண்ணி விரைந்து ஏகிய இளையாதித்தன் முள்வேலியின் அருகில் ஒரு பெரியவர் வெளிப்பாலத்தை நோக்கியவாறு நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அந்த மனிதரை அவனுக்குத் தெரியும். அவர் பஞ்சடிக்கும் பகுதியில் பணிபுரிந்து வந்தார். அன்று அவருக்குப் பகல் முறை. இன்னும் ஏன் அவர் வீடு திரும்பாமல் நிற்கிறார்?

பொழுது சாய்ந்து இருள் பரவிற்று. ஆலையைச் சுற்றியுள்ள விளக்குகள் வேலிப்புறத்தில் ஒளியைப் பாய்ச்சின. சிறிது நேரம் பொறுத்து வேலையை இடையே விட்டு வெளியே வந்த இளையாதித்தன் அந்தப் பெரியவர் அருளப்பர் இன்னும் முள்வேலியின் அருகிலேயே நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். மெல்ல அவரை நெருங்கி அவருடைய தோளைத் தொட்டுப் 'பெரியவரே' என்று விளித்தான். அருளப்பர் திடுக்கிட்டுத் திரும்பினார். அவருடைய பார்வையில் அச்சத்தின் இரேகை படர்ந்திருந்தது.

"இன்னும் வீடு திரும்பவில்லையா"?

"இல்லை, இன்னும் இல்லை," தயங்கியவாறு பேசினார் அருளப்பர். "இன்று கூலி வாங்கினேன். அதில் பெரும்பகுதியைப் பறித்துக்கொள்ளப் பழிகாரர்கள் பாலத்தின் மேல் கூடியிருக்கிறார்கள்."

பாலத்தின்மீது நெடிதுயர்ந்த உருவம் ஒன்று அரசநடை போட்டது. பல சுருக்கங்கள் வைத்துத் தைக்கப்பட்ட தளர்ந்த கால்சட்டை, நீண்ட நீலநிறக்குப்பாயம். தலையில் விசிறிவைத்த சரிகைத் தலைப்பாகை. கையில் உறுதியான கைத்தடி. முறுக்கிய மீசையும், சிவந்த பெரிய கண்களும், சுருக்கம் விழுந்த செங்கனியைப்போன்ற முகமும் காண்பதற்கு அருவருப்பை ஊட்டின. அவனுடைய பெயர் என்னவென்றுகூட யாருக்கும் தெரியாது. எளிய மக்கள் அவனை "ஆறுமாதக் கடன்காரன்" என்று அழைப்பார்கள்.

"அவனைக்கண்டு அச்சமா பெரியவரே, தேவையானால் நானும் உங்களுடன்கூட வருவேன்."

"வேண்டாம், இன்னும் சற்று நேரத்தில் அவன் போய்விடுவான், பின்னர் வீடு திரும்புவேன்."

இளையாதித்தன் மறுபடியும் தன் பணிமனையுள் புகுந்தான். "சதக்,

சதக்'' என்ற ஒலித்தன பொறிகள். வெகு விரைவில் நெய்யப்பட்ட துணியின் நீளம் பெருகிற்று. அரைமணி நேரம் பொறுத்து வெளியே பார்த்த ஆதித்தன் அந்தப் பெரியவர் இன்னும் வேலியண்டையே கைகளைப் பிசைந்தவாறு நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். ஏதோ முடிவுக்கு வந்தவனாக விடுமுறைச் சீட்டெழுதிக் கொடுத்துவிட்டு உடை மாற்றிக்கொண்டு அருளப்பரை அழைத்தான். 'வாருங்கள் வீட்டிற்குப் போகலாம், நான் உங்களுக்குத் துணை வருவேன்.''

நன்றி பொங்கும் முகத்துடன் அருளப்பர் ஆதித்தனைப் பின்தொடர்ந்தார். பாலத்தைக் கடக்கத் தொடங்கிய வேளையில் அந்த உயரமான மனிதன் அவர்கள் எதிரே வந்து நின்றான். வாய் பேசக்கூடும் வசவுகளைத் தனது மொழியில் கூறி அருளப்பரை ஏசினான். அவர் பதறிப் போய் நின்றார்.

"ஏய் நிறுத்து! வாயில் வந்ததைக் கொட்டி உன் அழுக்கை வெளிப்படுத்தாதே.'' ஆதித்தன் அவனுடைய மொழியிலேயே விடையிறுத்தான்.

'நீ யார்'.

"நான் இவருடைய தம்பி. இவருக்குச் சான்று தருவேன்''.

'அந்த மனித உரு ஆதித்தனின் பெயரைத் தன்னுடைய ஏட்டில் பதிந்து கொண்டது''

அருளப்பரும் ஆதித்தனும் சேர்ந்தவாறு நடந்து சென்றார்கள். பிறை நிலா நகைமுகம் காட்டிற்று. தாரகைகள் மின்னொளி பரப்பின:

"அவனிடம் கத்தி இருக்கிறது தம்பி!'' அருளப்பர் கூறினார்.

"நம்மிடம் புத்தி இருக்கிறது பெரியவரே! நாம் அதைப் பயன்படுத்துவதுதான் இல்லை. அவனுடைய நாடு எது? ஊர் எது? இனம் என்ன? மொழி யாது? அவன் நம்மூரில் வந்து நம்மை அச்சுறுத்துகிறான் என்றால், நமக்கு நாணம் வேண்டாம்? ஆதித்தன் கனல் பொறிகளைப்போல் சொற்களைச் சிதறினான்.

"மிகவும் பதட்டமாகப் பேசுகிறாய் தம்பி''.

"என் நெஞ்சு கொதிக்கிறது பெரியவரே, நான் இந்தத் துணைக் கண்டம் முழுவதும் சுற்றியிருக்கிறேன். கீழை நாடுகளுக்கும் போயிருக்கிறேன்; நம்மைப்போன்று தன் மானங்கெட்டவர்களைக் காணவில்லை. அச்சம், பேதமை, அடிமைச் சிறுமதி. சற்றுமுன் உங்களை வழிபறித்தானே! அந்த இனத்தவனின் நாட்டையும் நான் சுற்றியிருக்கிறேன்: அவர்களுடைய உண்மைநிலை எனக்குத் தெரியும். அவர்கள் திருடுவார்கள், வழிப்பறி செய்வார்கள். ஆனால் பிச்சை எடுக்க வெட்கப்படுவார்கள். நாம் தான் மான உணர்ச்சியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டோம்!''

பெரியவர் பேசாமல் ஆதித்தனுடன் வழி நடந்தார். ஒரு தோப்பைக் கடந்தபோது, அவர் சுற்றுமுற்றும் நோக்கினார். ஆதித்தனின் முகத்தையும் பார்த்தார். தோப்பின் ஊடே தீயின் வெளிச்சம் தெரிந்தது. அப்போது அடித்த காற்றின் ஈரவாடையுடன் கருப்பஞ்சாறு தீய்ந்த மணமும் வீசியது. பெரியவர் கடனாளியானதற்கு இதுவும் ஒரு காரணம் என்று எண்ணிக் கொண்டான் ஆதித்தன்.

"நீங்கள் அவனிடம் எவ்வளவு கடன் வாங்கினீர்கள்''?

"நூறு ரூபாய்! அருளப்பர் கூறினார். "மகளின் திருமணத்திற்காக வாங்கினேன்''. இதுவரை இருநூறு ரூபாய்க்குமேல் திருப்பியிருப்பேன். இருந்தாலும் ஒவ்வொரு திங்களும் வட்டியே இருபத்தைந்து ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது.'' அந்த மங்கிய ஒளியிலும் அருளப்பரின் கண்கள் கலங்குவதைக் கண்டான் ஆதித்தன்.

வழியில் ஒரு சிறிய கோயில் குறுக்கிட்டது. அருளப்பர்மேல் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டார். சிலையின் முன் நின்று தலையில் குட்டிக்கொண்டார். தெண்டனிட்டு வணங்கினார். எட்டி நின்ற ஆதித்தனுடன் சேர்ந்துகொண்டார்.

"தம்பிக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லைப்போலிருக்கிறது''. அருளப்பர் கூறினார்.

"எனக்குத் தன்மான உணர்ச்சியைப் பெருக்கும் மதியிடம் மட்டும் நம்பிக்கை இருக்கிறது''. உங்களுக்கோ தலையில் குட்டிக்கொள்ளவும், தோப்புக்கரணம் போடவும், கடன் வாங்கியாவது ஆடம்பரமாகத் திருமணம் செய்யவும் நம்பிக்கை வேண்டியிருக்கிறது இவ்வளவு நம்பிக்கையும் கடன் கொடுத்தவர்களைக் கண்டால் கதறி ஓடிவிடுகிறது''. "தூ,'' என்று காறி உமிழ்ந்தான் ஆதித்தன். அருளப்பர் தலைகுனிந்து நடந்தார்.

*

சுத்தம் என்ற தத்துவமே செத்துவிட்ட இடம். ஒருவித ஒழுங்கும் இன்றிப் பல மண் குடிசைகள் எழும்பி நின்றன. குடிசையின்மேல் புகைப்படலம் எழும்பிப் பனிமூட்டத்தைப்போல் பார்வையை மறைத்தது. நல்ல பாதை என்பதே கிடையாது. இருக்கும் ஒற்றையடிப் பாதையில் பல இடங்களில் கழிவுநீர் தேங்கியிருந்தது. காற்றிலே ஒரு கெட்ட நாற்றம். அத்தகைய குடிசைகளுள் ஒன்றின் வாயிலில் முதியவர் அருளப்பரும் இளையாதித்தனும் போய் நின்றார்கள்'. ஆதித்தனை வெளியே நிறுத்திவிட்டு அருளப்பர் கடையில் வாங்கிவந்திருந்த உணவுப் பண்டங்களுடன் வீட்டில் நுழைந்தார். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.........

பதினாறு அடிக்கு எட்டடிச் சதுரமான ஒரே அறை. தரையும் சுவர்களும் நன்றாகப் பூசி மெழுகப்பட்டிருந்தன. ஒரு கோணித்திரை, அறையை இரு கூறாகப் பிரித்தது. அதன் வெளிப்புறப் பிரிவில் ஆதித்தனும் அருளப்பரும் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்தனர். நல்ல சுவையுள்ள உணவுப் பொருள்களை அருளப்பரின் மனைவி வாணி அம்மை அன்புடன் வட்டித்தாள்.

"ஐயாவுடன் தம்பி வந்த வேளை நல்லவேளை. அவருடைய வாழ்நாளிலேயே இன்றுதான் முழு ஊதியத்தையும் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார். தம்பிக்கு இதே ஊர்தானோ'? வாணியம்மை பேச்சைத் தொடங்கினாள்.

"ஆம் அம்மா,'' தற்போதைக்கு இந்த ஊர்தான். ஆனால் நான் பல ஊர்கள் சுற்றியிருக்கிறேன்''. ஆதித்தன் பணிவுடன் கூறினான்.

அந்த வீட்டின் சுவரிலுள்ள மாடங்களில் பல அழகிய வண்ணப் பொம்மைகள் காணப்பட்டன.

மான், மயில், பசு, கிளி, குருவி, அனைத்தும் உயிர் உள்ள மாதிரியே தோன்றின. கண்களில் உயிர்பெய்திருந்தது.

"இந்தப் பொம்மைகளை எங்கே வாங்கினீர்கள்?'' ஆதித்தன் வாணி அம்மையைக் கேட்டான்.

"எதற்காகக் கேட்கிருயப்பா"?

"இத்தகைய வேலைப்பாடுள்ள உருவங்களைக் கண்காட்சிச் சாலையில் மட்டுமே கண்டிருக்கிறேனம்மா."

வாணி அம்மையின் முகத்தில் பெருமை கலந்த புன் முறுவல் தோன்றியது. இதற்கிடையில் இருவரும் உண்டு முடித்தனர். வீட்டிற்கு வெளியேகிடந்த கயிற்றுக் கட்டிலில் இருவரும் அமர்ந்தனர். வாணி அம்மை அவர்களுக்கு வெற்றிலைபாக்கு வழங்கினாள்.

'அந்த உருவங்கள் அனைத்தும் என் மகள் தேமொழி செய்தவை.' களிமண்ணாலும் நெட்டியாலும் அவள் வெகு அழகாகப் பொம்மை செய்கிருள். ஐயா வாங்குகிற ஊதியம் பற்ருமல் இந்தப் பொம்மைகளை விற்று நாங்கள் வாழ்கிறோம்.

"எங்கே உங்கள் மகளைக் கூப்பிடுங்கள். அவளை நான் பாராட்ட விரும்புகிறேனம்மா"

வாணி அம்மை வீட்டினுள் நுழைந்தாள். தேமொழி வெளியே வரச்சற்று நேரம் ஆயிற்று. அந்த மங்கை வெளியே வந்தபோது தன் தாயார் உடுத்தியிருந்த சேலையையே தரித்திருந்ததைக் கண்டதும், ஆதித்தனுக்குத் தேமொழி நேரம்கழித்து வந்ததின் காரணம் விளங்கிற்று. அவனுடைய கண்கள் கலங்கின.

தேமொழி ஆதித்தனுக்கு வணக்கம் தெரிவித்தாள். அவன் தேமொழியுடைய கைத்திறத்தை வெகுவாகப் பாராட்டினான்! ஏதாவது படித்திருக்கிருயா"

'ஐந்துவகுப்புவரை படித்தேன் ஐயா! அதற்குமேல் படிக்க இயலவில்லை" தன்பெயருக்கு ஏற்றவாறு இனிமையாகப்பேசினுள்.

"தினமும் வீட்டிலேயே ஏதாவது படித்து அறிவை வளர்த்துக் கொள்ளலாமே!"

தமிழாசிரியர் ஒருவர் வீட்டில் நான் பொம்மைகள் விற்பதுண்டு. அவர்மூலம் அருட்பா என்ற புத்தகம் கிடைத்தது. அதைப்படித்து வருகிறேன்"

"அது நல்லநூலே, என்ருலும் நாளை நான் திருக்குறளும் சிலப்பதிகாரமும் கொண்டுவருவேன், அவற்றைப் படித்துவா"

"அப்படியே செய்வேன் ஐயா!" வணக்கம் தெரிவித்து வீட்டினுள் சென்ருள் தேமொழி.

மறுகிழமை தனது சில சாமான்களுடன் அந்தக் குப்பத்திற்கு வந்து சேர்ந்தான் ஆதித்தன். அவன் அருளப்பருக்குச் செய்திருந்த உதவியையும் அவனுடைய நல்ல பண்பையும் குறித்து அந்தச் சேரிவாழ் மக்கள் அறிந்திருந்தனர். ஆகவே அவர்கள் அவனை வரவேற்று அவனுக்கு ஒரு சிறு குடில் அமைத்துத்தர வலிய முன் வந்து உதவினர். பல உளுத்த மூங்கில்கள், கிழிந்தபாய்கள், ஓலைத் தடுக்கு, உடைந்த பலகை எல்லாம் வந்து குவிந்தன. பல சிறுவர்கள் உடல் உழைப்பை நல்கினர். ஏழை மக்களிடம் உள்ள நன்றியறிதலையும் அன்பையும் கண்டு உள்ளம் பொங்கினுன் ஆதித்தன்.

சேரிக் குழந்தைகள் அவனிடம் மிகுந்த பிரியமுடன்பழகின. ஆதித்தன் அவர்களுக்குச் சுத்தமாக இருப்பது எப்படி என்று தன் செய்கையின்மூலம் காட்டினுன். வீடுகளின் அண்மையில் மலம் கழிக்கும் வழக்கமும் குப்பை கொட்டுவதும் நின்றன. எல்லாக் குழந்தைகளையும் திரட்டி அண்மையில் ஓடும் சிறுஆற்றுக்கு அழைத்துச் சென்ருன். அனைவரும் உடைகளைத் துவைத்துக் குளித்தனர். மிகக் குறைந்த காலத்திற்குள் சேரிவாழ் மக்களுக்குள் தூய்மை உணர்ச்சியைப் பெருக்கிவிட்டான்.

அங்கு வாழ்ந்த மக்கள் பலரும் சிறு தொழில்களும் கூலிவேலையும் செய்து பிழைத்தனர். அவர்களில் எல்லோருமே அந்த 'ஆறு மாதக் கடன்காரனி'டம் கடன் பட்டிருந்தனர். ஒருவனுவது அவனுடைய கொடுமையினின்றும்விடுதலை பெற்றிருக்கவில்லை. ஒரு தனி மனிதன் வெறும் செல்வத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு இன மக்களை எப்படி அடிமைப் படுத்திவிடலாம் என்ற உண்மையை உணர்ந்துகொண்டான் ஆதித்தன். அவர்களை இதன்பிடியிலிருந்து விடுவிக்க உறுதி பூண்டான்.

அன்றுமாலை ஊர்க்கூட்டம் கூடியபோது செல்லப்பன் என்ற இளைஞன் எழுந்துநின்ருன். 'நாம் அனைவரும் அந்த மனிதனிடம் கடன்பட்டிருக்கிருேம். நம்மில் ஒவ்வொருவரும் வாங்கிய தொகையைப்போல் இருமடங்கு திருப்பியும் கொடுத்திருக்கிருேம். என்ருலும் வாழ்நாள் முழுவதும் வட்டி கொடுக்கத்தான் நமது வருமானம் போதுமானதாக இருக்கிறது. நம் நண்பர் ஆதித்தன்தான் இதற்கு ஒரு வழி கூறவேண்டும்!"

"எல்லோரும் சேர்ந்து அறமறியல் செய்தால் என்ன?" அழகன் என்னும் இளையவன் கேட்டான். அவன் நகரத்தில் கொடிபிடித்துச் செல்லுபவர்களைக் கண்டிருக்கிருன்.

இளையாதித்தன் எழுந்து நின்று பேசினுன். "நமது போர் முறைக்கு மதிப்புத் தரக்கூடிய எதிராளியிடம் தான் அறமறியல் செய்வது இயலும். இல்லையேல் வெளியார் படையெடுப்பைத் தடுக்கத் துளசிச் செடியினுல் அரண் அமைத்த தஞ்சை மன்னனின் முடிவுதான் நமக்கும் ஆகும். எதிரியை அன்பினுல் வெல்ல முயலவேண்டியது தான். ஆனுல் எதிரி அதற்கு ஏற்றதாக இல்லாதபோது அவனுடைய பலம் குறைந்தபகுதியைச் தாக்கவேண்டும். தாக்கவேண்டும் என்ருல் நான் அடிதடி முறைகளைக் கூறவில்லை. உணர்ச்சிகளைத் தாக்கவேண்டும். உங்களில் யாராவது முப்பாலைப் படித்திருக்கிறீர்களோ என்று நான் அறியேன். வள்ளுவர் ஒரு சிறந்த படைத் தலைவர். அவருடைய வழிகளை நாம் இன்றைய நிலைக்கேற்றபடி பயன்படுத்தவேண்டும்.

செய்வானை நாடிவினை நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்

என்று அவர் கூறுகிருர்!"

கடன் தொல்லையை ஒழிக்க ஆதித்தன் ஒரு முறையைக் கூறினுன். அந்த முறை வெற்றிதருமா என்று பலருக்கு ஐயம் இருந்தது. என்ருலும் இளையாதித்தனுக்குச் செயல் உரிமைதந்து எல்லோரும் அதன்படி நடப்பதாகக் கூறினர்.

அடுத்த வெள்ளிக்கிழமையன்று அந்தக் குப்பத்திலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டது. அதன் பின்னே நான்கு பேர் ஒரு நீண்ட பெட்டியைத் தோள்மேல் சுமந்துவந்தனர். அந்தப் பெட்டியினுள் நெட்டியினுல் செய்யப்பட்ட உருவம் ஒன்றிருந்தது. அதற்கு அந்த ஆறுமாதக் கடன்காரனின் உடையையே அணிவித்திருந்தனர். அதன் அங்கஅமைப்பு முழுவதையும் சிறப்பாக அமைத்திருந்தாள் தேமொழி.

அந்த ஊர்வலம் கடன்காரன் வீட்டு வாயிலில் நின்றது. அந்தச் சவப் பெட்டியை அங்கே வைத்துவிட்டு முகத்தில் துயரக்குறி காட்டி எல்லோரும் அங்கேயே நின்றனர்.

வாயில் வழங்க இயலாத பேச்சுக்களைப் பேசிக்கொண்டு அந்த முரடன் அங்கே வந்தான். அந்தப் பெட்டியினுள் தன்னைப்போன்ற உருவம் கிடப்பதைப் பார்த்ததும் அவன் உள்ளம் திடுக்கிட்டதை அவனுடைய முகம் காட்டிற்று. இரைந்து கத்திக்கொண்டே வீட்டினுள் போய்விட்டான்.

மறுநாளும் இவ்வாறே செய்தார்கள். யாரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. கூச்சலில்லை. அழுகையில்லை. அமைதியாக அந்தப் பெட்டியை அவன் வீட்டு வாயிலில் வைத்துவிட்டுத் துயரமுகம் காட்டி நிற்கவேண்டியது. அவ்வளவேதான்.

கடன்காரன் வீடுமாறிச் சென்றான். சேரிவாசிகள் விடாமல் பின் தொடர்ந்தார்கள். ஊரில் உள்ள பலரும் அவனிடம் கடன் பட்டிருந்தார்களாதலால், அவர்களும் இந்த ஊர்வலத்தை வேடிக்கை காண வந்தனர். இந்தச் செயலைத் தொடர்ந்து ஒரு கிழமை செய்து வந்தார்கள். கடன்காரன் கையில் தடியுடன் வெளியில் உலாவுவதை நிறுத்திவிட்டான். பெட்டியினுள் தன்னுருவத்தைக் காணும்போதெல்லாம் அவன் உள்ளம் துணுக்குற்றது...

"தம்பிமார்களே, நான் இவர்கள் ஊர்வழக்கம் எல்லாம் அறிந்தவன். பெரிய புள்ளிகளையெல்லாம் அவமானப்படுத்துவதற்கு இவர்கள் இந்த வழியை மேற்கொள்ளுவதைக் கண்டிருக்கிறேன். ஆனால் அந்த ஊரார்கள் அநாகரிகமாகக் கூச்சல்போட்டு மாரடித்துக் கொண்டு அழுவார்கள். நாம் நமது பண்பைக் கடைப்பிடிக்கவேண்டும். "கடிதோச்சி மெல்ல எறிக" என்றார் பொய்யாமொழியார். இந்த முறையைக் கையாண்டு இவர்கள் ஊரில் ஒரு அமைச்சர் அவையையே பதவி துறக்கச் செய்திருக்கிறார்கள்." ஆதித்தன் தனது அநுபவத்தைக் கூறினன்...

ஆதித்தன் கண்ட வெற்றியின் விளைவாக அடுத்த திங்கள் முதல் நாளன்று ஆலையை அடுத்த சாக்கடைப் பாலத்தின் சுவர் காலியாக இருந்தது — அங்கு அந்த ஆறு மாதக் கடன் காணப்படவில்லை.

★

"ஈஸ்டர் தீவு"

—(வில்லவன்கோதை)—

ஈஸ்டர்: உலகெங்கும் உள்ள கிறித்தவர்கள் உவகையுடன் கொண்டாடும் ஒரு விழா. சிலுவையில் அறையுண்டு தன் இன்னுயிரை ஈந்த இயேசுநாதர் உயிர்த்தெழுந்ததைச் சிறப்பிக்கும் திருவிழா. மார்ச்சுத் திங்கள் இருபத்தோராம் நாளிலாவது, அதன் பிறகு வரும் முழுநிலவுக்கடுத்த முதல் ஞாயிற்றுக் கிழமையிலாவது கொண்டாடப் பெறுவது. "ஈஸ்டர்" என்பதற்கு 'இளவேனில்' என்று பொருள்; இளவேனிலில் இயற்கையன்னை பசுமை போர்த்துப் பரவசத்தோடு விளங்குவதொப்ப ஈஸ்டரில் கிறித்தவர்கள் புதுநீராடிப் புத்தாடை பூண்டு விளங்குவர். அன்று கோயில்களில் பலிபீடத்தின் தூய்மையைக் குறிக்கும் வகையில் அதனை வெண் லில்லி மலர்களால் அழகு செய்வர்.........

1772-ஆம் ஆண்டு! அன்றும் ஈஸ்டர் தினம்! அமைதி நிலவும் பசிபிக் கடலிலே அந்த மரக்கலம் சென்றுகொண்டிருந்தது. பொன்னையும் பொருளையுமே குறிக்கோளாகக்கொண்ட டச்சுத் தளபதி ஜேக்கப் ராக்கவீன்(Jakob Roggaveen) அந்தக் கலத்தைச் செலுத்தினன். தென்னமெரிக்காவின் மேற்குக்கரை நாடான சிலி நாட்டுக்கு நேர் மேற்கே அந்தக் கப்பல் சென்றுகொண்டிருந்தது. நீலக் கடலன்றி நிலத்தையே காணாது வாடினன் ராக்கவீன். பல நாட்கள் பயணத்திற்குப் பின் ராக்கவீன் முகத்திலே அன்றுதான் மகிழ்ச்சியின் இரேகைகள் பளிச்சிட்டன. தூரத்திலே உயர்ந்தோங்கிய கோட்டைச் சுவர் ஒன்று தெரிந்தது. நிலத்தைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியிலே கலத்தை விரைந்து செலுத்தினன். ஆனல் அவன் கண்டது கோட்டைச்சுவரல்ல; மனிதச் சிலைகள் நிறுத்தப்பட்ட உயர்ந்த மேடைகள்! அது ஒரு தீவு; கற்சிலைகளும், கட்டிடங்களும், கல்வெட்டுக்களும் நிறைந்த பெருந் தீவு; என்றாலும் செல்வத்தைத் தேடிச் சென்ற ராக்கவீன் அவற்றைக் கண்டு வெறுப்புடன் அத்தீவைவிட்டு வெளியேறினன். ஈஸ்டர் தினத்திலே அவனால் கண்டுபிடிக்கப்பட்ட தீவிற்கு ஈஸ்டர் தீவு என்றே பெயர் வழங்கப்பட்டது.

ஈஸ்டர் தீவு தென்னமெரிக்க நாட்டிற்குச் சொந்தமானது; சிலி நாட்டிலின்றும் மேற்கே 2,300 மைல் தொலைவில் தன்னந் தனியாகப் பசிபிக் கடலில் உள்ளது. அதன் பரப்பளவு சுமார் எழுபது சதுர மைல்கள். அது ஓர் எரிமலைத் தீவு; அத்தீவின் மூன்று மூலைகளிலும் எரிமலைகள் உள்ளன.

1888-ஆம் ஆண்டு முதல் இது சிலி நாட்டுக்குச் சொந்தமான சிறைத்தலமாக உள்ளது. இது வாய்கூ தீவு (Waihu Island) என்றும், ஸ்பானியரால் பாஸ்குவா தீவு (Pascua Island) என்றும் வழங்கப் பெறுகிறது. இங்கு சுமார் ஆயிரவர் வாழ்கின்றனர்; அவர்களுடைய தொழில் ஆடு வளர்ப்பு.

இத்தீவிலே சுமார் 500-சிலைகள் உள்ளன. அவற்றுள் சிறியது 12-அடி; மிகப் பெரியது 66-அடி. இங்கு பல கல்வெட்டுகளும் காணப் பெறுகின்றன. இவற்றுள் சில சிலைகள் பிரிட்டிஷ் மியூசியத்தில் காணப் பெறுகின்றன.

ஈஸ்டர் தீவு எழுத்துக்களைப்பற்றிய ஆராய்ச்சி இப்போது மிகச் சிறந்த முறையிலே செய்யப்பட்டு வருகிறது. ஈஸ்டர் தீவு ஒரு காலத்திலே திராவிட நாகரிகத்தில் ஆழ்ந்திருந்தது. அதன் மொழியும் பிறவும் மொகஞ்சதாரோ நாகரிகத்தை ஒட்டியே உள்ளன என்ற சிந்தை இனிக்கும் செய்திகள் ஆராய்ச்சியில் வெளியாகின்றன. திரு. ஹெராஸ் அடிகளார் Light of Mohenjo Doro' New Review 1936-ல் பின்வருமாறு கூறுகிறார். "சாமிய அல்லது தென் அராபிய எழுத்துக்கள இன்றும் மொகஞ்சதாரோ எழுத்

துக் குறிகள் சிலவற்றைக் காத்து வருகின்றன. ஈஸ்டர் தீவு எழுத்துக்கள் பெரும்பாலும் மொகஞ்சதாரோ எழுத்துக்கள் போன்றவை.

ஈஸ்டர் தீவு வெளியுலகத் தொடர்பை அதிகம் பெற்றிராது தன்னையாளும் சிலிநாட்டிற்கு 2,300-மைல் தொலைவில் இருந்த போதிலும், அத்தீவின் எழுத்துக்கள் பல்வேறு இடங்களிலும் காணப்பெறுகின்றன. இவற்றினால் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஈஸ்டர் தீவு வேறுபல தீவுகளோடு கூடிப் பெரும் நிலப்பரப்பாக இருந்திருக்கும் என்று ஊகிக்கப்படுகிறது. எரிமலைக் குழப்பத்தினால் தீவுகள் பிரிந்திருக்கலாம்; அத்தீவின் நாகரிகச் சின்னங்கள் காண்போர் கருத்தைக் கவரும்வண்ணம் உள்ளன. அங்கே காணப்படும் மனிதச் சிலைகள் அங்கே நிலவிய நாகரிகத்தைப்பற்றி நமக்கறிவிக்கின்றன. எரிமலைக் குழப்பங்களினாலே அத்தீவிலே வாழ்ந்தவர்கள் அதனைவிட்டு வெளியேறியிருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

"ப்யூஜித் தீவு, வித்திலே தீவு ஆகிய இருதீவு மக்களும் எரிமலைக் குழப்பத்தாற் பிரிக்கப்பட்டவர்கள். அவற்றுள் ஒரு தீவினர் தங்களது எழுத்துக்களைப் பெரும் பாறையொன்றில் செதுக்கி அவற்றை வேறு தீவிற்குக் கொண்டுசெல்ல முயற்சித்தனர். ஆனால் அது தவறிக் கடலில் விழுந்தது" என்று ஒரு கதை (?) அந்தப் பகுதியிலே வழங்கப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்பதை ஆராய்ந்து காணும் முயற்சியிலிறங்கித்தேடப்பட்டபோது, தவறி விழுந்ததாகச் சொல்லப்படும் எழுத்துப்பாறை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அப்பாறையின் எழுத்துக்கள் சீன எழுத்துக்களாக இருக்குமென ஆராய்ச்சியாளர்கள் எண்ணினர்; அதை உறுதி செய்யும்பொருட்டு அதன் புகைப்படப் பிரதி சீனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்க்கு அனுப்பப்பட்டது. ஆனால் சீன ஆராய்ச்சியாளர்கள் அப்பாறை எழுத்துக்கள் சீன எழுத்துக்கள் அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள்; அவை ஈஸ்டர் தீவு எழுத்துக்களாக இருக்கலாமெனத் தெரிகிறது; திரு. ஆர். ஜி. ஹண்டர் (R. G Hunter) 'Riddles of Mohenjo Doro' (New Review) P. 314—1936-ல் பின்வருமாறு குறிக்கிறார்:

"கிரேத்தா, சுமேரியா, எகிப்து, மொகஞ்சதாரோ, ஈஸ்டர் தீவுகளின் எழுத்துக்கள் ஒரே வகையாகக் காணப்படுகின்றன".

இதிலிருந்து திராவிட நாகரிகப் பண்பு அமெரிக்காவுக்கு அப்பாலும் ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலும் எழுத்துக்கள், பண்பாடுகள் என்ற வகையிலே பரவியிருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

ஈஸ்டர் தீவைப்பற்றியும், அ கேயுள்ள, கற்கட்டிடங்கள், கற்சி கள், கல்வெட்டுக்கள் ஆகியவ றைப்பற்றியும் செய்யப்படு ஆராய்ச்சிகள் இன்னும் முடிவு வில்லை. அவை முழுமையும் வெ யாகுமானால் திராவிட நாகரிக பண்புகளைப்பற்றிய பல சுவை யான செய்திகளை இன்னும் அதி அளவில் — நல்லமுறையில் நா எதிர்பார்க்கலாம்.

★

இலங்கை எதிர்க் கட்சி உறுப்பினரின்
வீண் குற்றச்சாட்டுக்குப்
பொதுச்செயலாளர் மறுப்பு

இலங்கைப் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினரான திரு. பண்டாரநாயகா என்பவர், இலங்கை முதலமைச்சராயிருந்த பண்டாரநாயகாவின் கொலைச் சதிக்குத் தென்னகத் திராவிட முன்னேற்றக் கழகமும் உடந்தையாக இருந்ததாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கும் கூற்றைச் செய்தித் தாள்களில் படித்துத் திடுக்கிட்டுப் போனேன். அந்தக் கூற்று உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட, முழுப் பொறுப்போடு மறுக்கத்தக்க, வன்மையாகக் கண்டிக்கத்தக்க, நடுநிலையாளராலும் நல்லறிவு படைத்தோராலும் வெறுக்கத்தக்க, கற்பனை செய்யப்பட்ட வீண்பழியாகும். பொறுப்புவாய்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கூற்றை எப்படிக் கூறத்துணிந்தார் என்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

கருத்து வேற்றுமையைக் கத்திமுனையாலோ அல்லது துப்பாக்கிக் குண்டாலோ தீர்த்துக்கொள்ளும் இழிசெயலை, 'அருவருத்தொதுக்கத்தக்க காட்டுமிராண்டியின் கயமைச்செயல்' என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் படுகொலை ஏற்படும்போதெல்லாம் கூறிவருகிறது. தி. மு. கழகம், அறவழியில் நின்று செயலாற்றி வருவதிலேதான் தன்கருத்தினைச் செலுத்தி வருகிறது.

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை வாழ் தமிழர்களிடையேயும், தென்னகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றுள்ள தமிழர்களிடையேயும் நல்லுறவு ஏற்படவும், அவர்களின் நல்வாழ்வு தழைக்கவும், அவர்களிடையே பகுத்தறிவு நெறி பரவவும் ஆன அரும்பணிகளைப் புரியும் ஒரு பண்பாட்டு அமைப்பாகத்தான் இருந்து வருகிறது. தென்னக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இலங்கை திராவிட முனனேற்றக் கழகத்திற்கும் பண்பாட்டுத் தொடர்பைத் தவிர வேறு அரசியல் தொடர்பு எதுவுமில்லை. மேலும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை அரசியலில் ஈடுபடுவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரின் கூற்று மறுத்தொதுக்கத்தக்கது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

சேரவாரீர் செயல்பட

—(அ. பேரண்ணல்)—

17-ஆம் நூற்றாண்டில் மத சுதந்திரம் கோரி இங்கிலாந்திலிருந்து மேபிளவர் என்ற கப்பலில் அமெரிக்காவைச் சென்றடைந்தனர் ஆங்கிலேயர்களில் பலர். சென்ற இடத்தில் சிறப்புற்று வாழ்ந்தனர். எனினும் தாயகத்தின் அரசியலின் கீழ் தான் வாழவேண்டி இருந்தது.

சென்ற இடத்திலே பதின்மூன்று குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நாடும் தனித்தனியே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளைக்கொண்டிருந்தது. ஆயினும், நிர்வாகப் பொறுப்பு, தாயகத்தாரால் நியமிக்கப்படும் கவர்னரின் வசம் இருந்தது. சட்டசபைக்கும் கவர்னருக்கும் ஆட்சியின் காரணமாக சச்சரவுகள் நிகழ்ந்தவண்ணமிருந்தன.

குடியேற்ற நாடுகள் எல்லாம் தாய்நாட்டின் சொத்துக்கள் என நினைத்தது இங்கிலாந்து. எந்தவித வியாபாரமும் தாய்நாட்டின் மூலமே நடத்தப்பட்டது. குடியேற்ற நாட்டவர்களின் மனம் குமுறியது.

குனிந்த குடியேற்ற நாட்டின் தலையில் குட்டிக்கொண்டே இருந்தனர் வரி என்ற பெயரால். இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் நடந்த யுத்தத்தால் உண்டான நட்டத்திற்கு மேலும் பல புதிய வரிகளை விதித்தனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவைகள் முத்திரைக் காகிதச் சட்டம், தேயிலைவரி என்பனவாம். குனிந்தவன் தன் தலைவலி தாங்காது போகவே, குனிந்தபடியே குட்டுபவனின் காலை வாரிவிடச் சமயம் பார்த்தான். போஸ்டன், துறையில் வந்து தங்கிய தேயிலைக் கப்பலில் இருந்த தேயிலை முழுவதையும் கடலில் எறிந்தனர். அதை அவர்கள் ஒரு விருந்தாகக் கருதினர்.

ஆணவங்கொண்ட ஆங்கில ஏகாதிபத்தியம் ஆருக்கோபங்கொண்டது. கொடுமைக்குள்ளாக்கினர் குடியேற்ற நாட்டினரை. தடைபல விதித்தனர், எனினும் தயங்காது படை திரட்டினர் குடியேற்ற நாட்டினர்.

1776-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 4-ம் நாள் பிலடெல்பியாவில் அமெரிக்கப் பிதா எனப் போற்றப்படும் வாஷிங்டன் தலைமையில் ஒன்று கூடிக் குடியேற்ற நாடுகள் சுதந்திரம் அடைந்துவிட்டதாகப் பிரகடனப்படுத்தினர். பின், தாயகத்தார் படைகொண்டு தாக்கினர் எனினும், சாரடோகா வர்ஜீனியா போன்ற இடங்களில் பெருந்தோல்வி கண்டனர். விடுதலை வீரர்களின் துணிவுக்கு ஈடில்லை என நிரூபித்தனர். 1783-ல் வேர்சேல்ஸ் என்னுமிடத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றன. அன்று முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற பெயரில் இன்று உலக வல்லரசு நாடாகத் திகழ்கிறது

ஆண்டவனும், ஆளப்பட்டவனும் ஒரே இனம். மதத்தால் மாறுபட்டவர்களல்ல! மொழியால் வேறுபட்டவர்களல்ல! எனினும் தாய்நாட்டின் தலைமையை ஒப்புக்கொள்ளவில்லை. எங்களை ஆள உங்கள் பிரதிநிதி (கவர்னர்) ஏன் என்று எதிர்த்தனர். தன்னிகரற்று வாழ வசதி இருக்கிறது, இங்கே உங்கள் தயவு வேண்டாம் என்று விரட்டினர். உங்கள் ஆட்சியால் எங்கள்மீது வரி ஏறுகிறதே தவிர, வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்றனர். உங்கள் ஊதாரிச்செலவுகட்கு எங்கள்மீது வரி விதிப்பதை ஒப்போம் என்றனர். தாய்நாட்டவரால் போடப்பட்டிருந்த விலங்கை முறித்தனர்! முரசுகொட்டினர்!! சுதந்திர மனிதர்களாக உலவுகின்றனர் வாழ்க்கையின் உச்சியிலே.

இத்திருவிடத்திலேயே பிறந்தோமே! நம் நிலை என்ன? நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது. எண்ணிப்பார்த்தால் கண்ணீர் பெருகுகிறது. ஆண்டு பழக்கப்பட்டவர்கள் நாம். இன்று நம்மால் ஆளப்பட்டோரின் தயவால் வாழ்கிறோம். வாரி வழங்கியவர்கள் நாம். இன்று வரிச்சுமை தாங்கமுடியாது தவிக்கிறோம். பண்டை நாகரிகம் படைத்திய நமக்கு இன்று பேசும் தடைவிதிக்கப்படுகிறது. ஐயகோ உலகிற்கே நாகரிகம் போதித்த நம்மைக்கண்டு காட்டுமிராண்டிகள் என்று ஏசுகின்றனரே! உணர்ச்சியற்ற மரக்கட்டைகளா நாம்? நாம் நினைத்தால்—நம் திருவிடத்தார் அத்தனை பேரும் செயல்பட்டால் இன்பத் திராவிடம் மலர்ந்தே தீரும்.

"அரைப்பட்டினி அரைச்சுகம் பாதி சுதந்திரம் பாதி அடிமை என்ற இவைகளை மனிதவர்க்கம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது" என்ற லிங்கன் வார்த்தைகளை நினைவுப்படுத்திப் பாருங்கள். நமக்கு விடிவுகாலம் வரத்தான்போகிறது! அதுவும் நெடுந்தொலைவில் இல்லை இன்பத் திராவிடம் மலரத்தான் போகிறது. அதற்காக நம்மைத் தயார்செய்து கொள்ளவேண்டும். ★

எதிர்பாருங்கள்!

தோழர்:

ப. உ. சண்முகம் எம். எல். ஏ.,

அளிக்கும்

"பொன்னித்தீவில் கன்னித்தெய்வம்"

என்ற தொடர் கதை

விரைவில் இடம்பெறும்.

மாக்கியவல்லி

(கி. பி. 1469—1527)

— பழநி —

மாக்கியவல்லியின் "இளவரசன்" என்ற நூலை தற்கால அரசியல் தத்துவ நூல்கள் பலவற்றுள்ளும் தெளிவான முதல்நூலாகக் கருதப்படுகிறது. இந்தப் பிரசித்திபெற்ற நூல், நவீனமானதொரு நூலாகக் கருதப்படுவதன் காரணம் என்னையோவெனின், அந் நூலில் காணப்படும் அரசியல் முடிபுகள் மதபோதனைகளையோ அல்லது தத்துவச் சம்பிரதாயங்களையோ ஒட்டியதோடன்றி வரலாற்றுச் சான்றுகளையும் சமகாலத்து அரசியலையும் அடிப்படையாகக்கொண்டு இலங்குவதுதான். அஃதன்றியும் அந்த நூல் அரசியல் பற்றிய கருத்துக்களை மதம், தத்துவம், அறநெறி இவைகளிலிருந்துவேறுபட்டும் தனித்தும் ஆராய்வதாகும். "இளவரசன்" என்ற நூல் எவ்வாறு சக்திவாய்ந்த புத்தி கூர்மையுள்ள ஒரு அரசியல்வாதி வெற்றிகரமாகத் தன்னுடைய அரசியல் வாய்ப்பினைக் கைப்பற்றி, சிறிது சிறிதாக அதனை மிகுதியாக்கி நாளடைவில் நிரந்தரமாக்கிக்கொள்ள முடியும் என்பதற்குத் தக்க வழிவகைகளை எடுத்தோதுகின்றது. சரியான, தவறான வழிகள் பற்றியும், பொது நன்மை குறித்தும், மதச் சம்பிரதாயங்களுக்குச் சார்பாக இவை எவ்விதம் ஒரு சர்வதிகாரியின் வெற்றிக்குத் துணை செய்கின்றது என்பதுபற்றியும் மாக்கியவல்லி இந்நூலில் விரிவாகவிளக்கியுள்ளார். "இளவரசன்" என்ற நூலில் கையாளப்பட்டுள்ள ஒரு புதிய முறையின் முழுமையும் தனிப்பட்டவகையில் அரசியல் பற்றிய மாக்கியவல்லியின் தேர்ந்த கருத்துக்களும் ஒரு புதிய சகாப்தத்தையே நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன என்றால், அது மிகையாகாது. இந்நூல் ஒருபுறம் மாக்கியவல்லியைப்பற்றியும்,மற்றொருபுறம் அவர் காலத்தில் இத்தாலியிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் நிகழ்ந்த அரசியல் சம்பவங்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

மாக்கியவல்லி கி. பி. 1469-ம் ஆண்டில் பிளாரன்சில் தோன்றினார். 1494-ம் ஆண்டு முதல் அவர் பிளாரன்ஸ் நகரத்து அரசாங்கத்தில் பணியாற்றிவந்தார். (இவ்வாண்டில்தான் எட்டாவது சார்லஸ் மன்னனின் படையெடுப்பும், மெடிசியின் முதல் நாடு கடத்தலும், குடியரசின் மறுதோற்றமும் நிகழ்ந்தன.) 1512-ம் ஆண்டில் மெடிசி திரும்பிவந்த வரையிலும்,

கோ. கோதண்டராமன்

மாக்கியவல்லி அரசாங்கத்தில் பணியாற்றிவந்தார். இதைத்தொடர்ந்து சுமார் ஒன்பதாண்டுகள் அவர் நாடுகடத்தப்பட்டு இருந்தார். இவ்வாறு அவர் நாடு கடத்தப்பட்டு இருந்தபோதுதான் மாக்கியவல்லி தனது பிரசித்திபெற்ற நூல்களாகிய 1. இளவரசன், 2. லிவியின் முதல் பத்துப் புத்தகங்கள்மீது உரையாடல்கள்—இவைகளை எழுதினார். இந்நூல்களன்றி அவர் வேறு சில வரலாறு சம்பந்தமான நூல்களையும் நாடக நூல்களையும் எழுதினார். மேற்குறித்த இரு நூல்களும் அரசுகளின் எழுச்சி வீழ்ச்சிகளைப் பற்றியும், நிலையான பலம் பொருந்திய அரசுகளை எவ்வாறு கட்டிக்காப்பது என்பது பற்றியும் குறிப்பிடுகின்றன. "இளவரசன்" என்ற நூல் குடியரசு அரசாங்கத்தினைப் பலப்படுத்திப் பாதுகாப்பதற்கு அவசியமான வழிவகைகளைப் பொதுவாக விளக்குகிறது. குறிப்பாக இந்நூல் ரோம் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கவிரிவினைச் சுட்டிக்காட்டுகிறது. இரண்டாவது நூல், முழுமையான குடியரசின் முறைகளைப்பற்றி விளக்குகிறது.

பிளாரண்டைன் குடியரசில் மாக்கியவல்லி ஒரு உயர்ந்த அரசதந்திரி வேலை பார்த்துவந்தார். அவர் இத்தாலி நாட்டின் பல்வேறு நகரங்களுக்கும், பிரெஞ்சு நாட்டுப் பன்னிரண்டாம் லூயியின் அரசவைக்கும், மாக்ஸ்மிலியன் சக்ரவர்த்தியின் அரசவைக்கும் தூதுவராக அனுப்பப்பட்டார்—இவ்வாறு அவர் சென்ற தூதுக்குழு, பலதிறப்பட்ட சூழ்நிலைகளில் இயங்கிவந்த நாடுகளின் பழக்க வழக்கங்களை அவர் நன்கு கண்டறிவதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளித்தது. இவ்வாறு அவர் பிற நாடுகளுக்குச் சென்ற தூதுகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது அக்காலத்துக் கொடுங்கோலாட்சியும் அபகீர்த்தியிலும் சிறந்து விளங்கிய "சிசர் போர்கியா" என்ற சர்வாதிகாரியிடம் சென்ற தூதாகும். சிசர் போர்கியா நடத்திவந்த கொடுங்கோலாட்சியும், அவ்வாட்சியை நிலைநாட்டுவதற்கு அவ்வரசன் பின்பற்றிய தீய முறைகளும் மாக்கியவல்லிக்கு, நடைமுறை அரசியலுக்குத் தேவையான அரிய கருத்துக்களைத் தந்துதவின. மாக்கியவல்லியின் ஆழ்ந்த அனுபவமும் அவர் போர்கியாவின் ஆட்சியில் கண்டறிந்த பல அரிய உண்

மைகளும், சர்வாதிகாரத்தின் சாதனைகளைப்பற்றிய ஒரு விரிந்த அறிவினை அவருக்கு அளித்தது. மாக்கியவல்லியின் காலத்திலே நேரடி சர்வாதிகார தத்துவம் ஐரோப்பாவின் பல்வேறு அரசாங்கங்களிலும் திருச்சபைகளிலும் இருந்து காணப்பட்டது. இத்துடன் மாக்கியவல்லி வசித்து வந்த நகரத்தின் சுற்றுப்புற நிகழ்ச்சிகளும் இத்தாலி நாட்டின் அக்காலத்துப் பொது அரசியல் நிலைமையும், மாக்கியவல்லிக்கு, வெற்றிகரமான ஆட்சியாளன் ஒருவனுக்கு வேண்டிய பண்புகளைப் பகுத்துணர வேண்டிய அவசியத்தை, நன்கு புலப்படுத்திற்று. அக்காலத்து நிலவிய சிறு அரசுகளின் நிலையற்ற தன்மையிலிருந்தும், பிராந்திய வரம்புகளின் காரணமாக எழும் சச்சரவுகளின் விளைவாகத் தோன்றும் குழப்பங்களிலிருந்தும் ஒரு நாடு தப்புவிக்கப்படவேண்டுமானால், அது சக்தி வாய்ந்த — கண்ணியமற்ற ஒரு சர்வாதிகாரியைக் கொண்டிருந்தால்தான் முடியும் என்று மக்கள் உணரத் தலைப்பட்டனர். "இளவரசன்" என்னும் நூலை மாக்கியவல்லி எழுதுவதற்கு முக்கிய காரணமென்னவென்றால், அவர் அரசியல் தருமத்தை, அரசியல் அவசியத்திற்குக் கீழ்படுத்தாமல், உயர்ந்த சுதந்திரமான ஒரு அறநெறியைப் பின்பற்றியதும், தலையானதும், ஒன்று சேர்ந்ததுமான ஒரு வகுப்பிற்குக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற அவரின் வாதமேயாகும். எனினும், இதனிலும் மேலான ஒரு இலட்சியத்தைப்பற்றிய நினைப்பு, அதாவது, கடினமானதும் கண்ணியமற்றதுமான சர்வாதிகாரத்துக்குட்பட்ட பொது நன்மையைப்பற்றிய கருத்துக்கள் ஏதும் மாக்கியவல்லியின் "இளவரசன்" என்ற நூலில் தெளிவாகவோ அல்லது அறுதியிட்டோ கூறப்படவில்லை. எனினும் மேற்குறித்த இலட்சியத்தைப் பற்றிய அவருடைய குறிக்கோள், அவரது நூலின் இறுதிப் பகுதியில் சிதறுண்டும் தெளிவற்ற முறையிலும் காணப்படுகிறது.

'இளவரசன்" என்ற நூல் 1513ம் ஆண்டில் எழுதி முடிக்கப்பட்டது. இந்நூலை எழுதியவுடன் மாக்கியவல்லி அதனை மெடிசிகளில் ஒருவருக்கு உரித்தாக்கத் திட்டமிட்டார். ஏனெனில், அவர் அத்தகைய செய்கையின் மூலம் நாடு கடத்தப்பட்டால், மறுபடியும் தன் சொந்த நாட்டிற்குத் திரும்ப அழைக்கப்படலாமென்றும், அவர் தனது நூலின் மூலம் அளித்த கருத்துக்களையும் தத்துவங்களையும் பின்பற்றுவதன் மூலமும் இத்தாலியின் இணைப்பிற்கு அது துணை செய்யும் என்றும் அவர் கருதினார். அவருடைய இந்த எண்ணம் வீணாகவில்லை. அதனால் அவர் லோரன்சோ—டி — மெடிசி என்பாருக்கு தனது நூலை உரித்தாக்கினார். இந்த லோரன்சோதான் 1516-ம் ஆண்டில் பிளாரன்ஸ் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். மாக்கியவல்லி எதிர்பார்த்ததைப்போல், அவர் நாடு கடத்தலின் பின் தனது சொந்த நாட்டுக்கழைக்கப்பட்டு அரசாங்க ஆலோசகராகவும் பிளாரன்ஸ், ரோம் இந்நாடுகளின் அரசியல் தூதுவராகவும் நியமிக்கப்பட்டார்.

★

விலைவாசிக் குறைப்பு சர்வகட்சிக் குழு

தி. மு. கழகக் கிளைகளுக்கு அறிவிப்பு:

ஏழை—நடுத்தர வகுப்பு மக்களைப் பாதிக்கின்ற வகையில் உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதைக் கண்டிக்கவும், விலைகளை நியாயமான அளவுக்குக் குறைக்குமாறு அரசியலாருக்கு வற்புறுத்திக் கூறவும் விலைவாசிகள் குறைப்பு சர்வகட்சிக் குழு ஒன்று சென்னையில் அமைந்திருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

நவம்பர் 15-ஆம் நாள் முதல் 22-ஆம் நாள் வரையுள்ள நாட்களில் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக்கூட்டங்கள் கூட்டியும் விலைவாசிகளைக் குறைக்க அரசியலார் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும் என்று சர்வ கட்சிக் குழு முடிவு செய்திருக்கிறது.

எனவே, மாநில அளவில் அமைந்துள்ள இந்த அமைப்பின் தொடர்பாக அந்தந்த மாவட்ட அளவில் குழுக்கள் அமைப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில், அந்தந்த மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்களும் தங்கள் தங்கள் ஒத்துழைப்புகளை அளிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

கிளைக் கழகங்களைப் பொறுத்தவரையில் விலைவாசிக் குறைப்பு வாரத்தில் ஆங்காங்கு நடைபெறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
8—11—59

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர் தி. மு. க.

காஞ்சீபுரம் ... திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
... அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.